செ.வெ.எண் :574 நாள்: 07.09.2021

**தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு ஊராட்சி ஒன்றியத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் இன்று (07.09.2021) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு ஊராட்சி ஒன்றியம், முகாசாகல்யாணபுரம் , கல்யாணபுரம் 1ம் சேத்தி ஊராட்சிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப. அவர்கள் இன்று (07.09.2021) பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை எளிய மக்களின் நலனுக்காக பல்வேறு நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் தமிழக அரசு ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் பல்வேறு நலத் திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. தஞ்சாவூா் மாவட்டத்தில் திருவையாறு ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட முகாசாகல்யாணபுரம் , கல்யாணபுரம் 1ம் சேத்தி ஊராட்சிகளுக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. முதலில், முகாசாகல்யாணபுரம் ஊராட்சியில் ஊரட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் கட்டப்பட்டு வரும் இரண்டு வகுப்பறை கட்டிடம், ரூ 15 ஆயிரம் மதிப்பில் காய்கறித்தோட்டம், ரூ 4 இலட்சம் மதிப்பில் தொடக்கப்பள்ளி பெண்கள் கழிவறை கட்டிட பணிகள் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மணித்தமிழ் மகளிா் சுய உதவிக்குழுவினரின் நாப்கின் தயாரித்தல் மற்றும் விற்பனையினையும், கல்யாணவுரம் 1ம் சேத்தி ஊராட்சியில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் தனிநபா் குடிநீா் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதையும், பாரத பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ரூ.2.40 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீட்டின் கட்டுமான பணியினையும் விளாங்குடியில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் குறுவை சாகுபடி தொகுப்புத்திட்டத்தின் கீழ் இயந்திர நடவு செய்யப்பட்டுள்ள நெற்பயிர்களை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட வளர்ச்சித் திட்டப் பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின்போது திருவையாறு ஒன்றியக்குழுத்தலைவர் திரு.அரசாபகரன், வட்டாட்சியர் திரு.நெடுஞ்செழியன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ஜான்கென்னடி, திருமதி.நந்தினி, உதவி பொறியாளர் திரு.விஜயகுமார், வேளாண்மை உதவி இயக்குநா் திரு.குமரன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**